எம்.சி.ஓ.பி எண்: 634/2016,5352 /2018(Joint Trial) தேதி: 26.09.2025

எ.மசா. : 4

பெயர் : சுரேஷ்குமார்

த/பெ. : பெருமாள்

வயது : 35

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசராணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சார்பதிவாளர் 1நீ இணை சார்பதிவகம் அசல் பத்திர பதிவு வடசென்னையில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழுங்கப்பட்ட அதிகார கடிதத்தை அடையாள அட்டையுடன் தாக்கல் செய்கிறேன். மேலும் மணிகண்டன் புஸ்பராணி எனபவருடைய திருமண பதிவு சான்று மற்றும் விண்ணப்பம் தாக்கல் செய்கிறேன். அது எ,மசாஆ 25 ஆகும். திருமண சான்று முழுவதும் டேமேஜ் ஆகி உள்ளதினால் அதற்கான ஆவணமும் எமசாஆ 25 உடன் கடைசி பக்கத்தில் இணைத்துள்ளேன். அருள்மிகு துலுக்கானாத்தம்மன் ஆலயத்தில் வைத்து திருமணம் நடந்துள்ளது என்று ஆவணத்தில் காணப்படுகிறது. எமசாஆ 25 ஆவணத்துடன் கடைசியில் இணைக்கபட்டுள்ள ஆவணத்தில் சாலை விநாயாகர் கோவில் தெரு, முத்தையார் பேட், சென்னை 1 என காணப்படுகிறது. கதவு எண் குறிப்பு இல்லை. ஒரு திருமணத்தை மாவட்ட பதிவாளர் பதிவு செய்யும்போது அவர்கள் தாக்கல் செய்யும் விண்ணபத்துடன் எவற்றை எல்லாம் இணைத்து தாக்கல் செய்கீறார்களோ அந்த ஆவணங்களை சரிபார்த்து பதிவு செய்வோம். எந்த எந்த ஆவணங்களின் அடிப்படையில் பதிவு செய்வீர்கள் என்றால் திருமண பத்திரிக்கை, திருமண போட்டோ மற்றும் சாட்சிகள் அடிப்படையில் பதிவு செய்வோம். அந்த திருமணத்தை பதிவு செய்தவர் நான் கிடையாது. அதனால் மற்ற விவரங்கள் தெரியாது. அந்த திருமண பதிவாளார்யை கேட்டால்தான் தெரியும். நான் தற்பொழுது தாக்கல் செய்த ஆவணத்தில் போட்டோவோ மற்றும் பத்திரிக்கையும் இணைக்கப்படவில்லை.

**மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கிறஞர்கள் கேட்டுக்கொண்டதன் பெயரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.